1982 ஏப்ரல் 7]

புதுக்கோட்டையில் தானாக இயங்கும் வார்ப்பு இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 791-திரு. இரா. தாமரைக்கனி திரு. பெ. சு. திருவேங்கடமும் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்துடன் சேர்ந்து அசோக்லேலண்டு கம்பெனி தானாக இயங்கும் வார்ப்பு இரும்பு தொழிற்சாலை ஒன்றை புதுக்கோட்டையில் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் SIDCO அசோக்லேலண்டு நிறுவனத்துடன் சேர்ந்து கூட்டுத் துறையில் joint Sector-ல் சாம்பல் நிற உருக்கு வார்ப்படங்கள் மற்றும் சாம்பல் நிற இரும்பு வார்ப்படங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஆட்டோமோடிவ் காஸ்டிங் லிமிடெட் என்ற பெயரில் புதுக்கோட்டைக்கு அருகில் ரூ.18கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்காக மைய அரசு இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த வார்ப்பு இரும்பு தொழிற்சாலையால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்? எப்போது தொழிற்சாலை துவங்கப்பட்டு, எப்போது அந்த வேலைகள் முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 1984 ஆம் ஆண்டில் தன்னுடைய உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கலாம். சுமார் 1,000 பேருக்கு நேரடியாகவும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றி பல உப தொழில்களும், சிறு சிறு தொழில்களும் வருகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அதிலேயும் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்படி நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதால், குறைந்தது 5,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய தொகுதி அறந்தாங்கி தொகுதியாக இருப்பதால், இந்த வார்ப்பு இரும்புத் தொழிற்சாலையை அறந்தாங்கியில் துவங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்காக மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்கு நன்றி. ஆனால் இந்தத் தொழிற்சாலை அறந்தாங்கியிலே அல்லது புதுக்கோட்டைக்கு அருகிலே அமைக்கப் படயிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆரம்பிக்கிற வார்ப்பு இரும்புத் தொழிற்சாலக்கு, 18 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே கம்பெனியினுடைய பங்கு எவ்வளவு நம்முடைய தொழில் வளர்ச்சிக் கழகத்தினுடைய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஜாயின்ட் செக்டாரில் 26 சதவீதம் அரசு தரப்பிலேயும், 24 சதவீதம் தனியார்கள் (இன்டஸ்ட்ரியல் புரொமோட்டர்ஸ்) போடவேண்டும் என்றும் இருக்கிறது. மற்றவைகள் எல்லாம் பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்கள் மூலமாக கடனாகப் பெறவேண்டிய முறைகள் இருக்கின்றன. ஜாயின்ட் செக்டார் என்று சொன்னால். அந்த முறையிலேயே இதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு இன்டஸ்டிரியல் காம்பிளக்ஷ் என்று சொல்லத்தக்க தொழிற்பேட்டை விரைவாக அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அது எந்த அளவில் உள்ளது? அதை உடனே ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே தொழிற்பேட்டை இன்டஸ்டிரியல் காம்பிளக்ஸ் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டு, பணியாளர்கள் அமைக்கப்பட்டு, அதற்கான நில ஆர்ஜித வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.